# நிதி முகாமையாளரின் அறிக்கை

**அன்பார்ந்த முதலீட்டாளருக்கு,**

30 செப்டம்பார் 2023 இல் நிறைவடைந்த காலத்திற்கான CT CLSA ஐ ஈல்ட் நிதியத்தின் அரையாண்டு அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்.

**பொருளாதார மீளாய்வும் கண்ணோட்டமும்**

இலங்கையின் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக 2023 இன் 2ஆம் காலாண்டில் -3.1%[1] ஆல் சுருங்கியதுடன் இது கடந்த வருடத்தில் அதே காலப்பகுதியில் வருடத்திலிருந்து வருடமாக -7.4%[1] வீழ்ச்சியினைக் கண்டிருந்தது. இதன் விளைவாக 2023 இன் முதலாம் அரையாண்டில் பொருளாதாரமானது வருடத்திலிருந்து வருடமாக -7.9% ஆல் சுருக்கமடைந்தது. 2023 இன் 2ஆம் காலாண்டின்போது கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகள் முறையே வருடத்திலிருந்து வருடம் -11.5%[1] மற்றும் -0.8%[1] ஆல் சுருக்கமடைந்ததுடன் வேளாண்மைத் துறையானது வருடத்திலிருந்து வருடம் ஒரு நேர்மறையான வளர்ச்சியாக +3.6%[1] இனை பதிவுசெய்தது. மார்ச் 2023 இல் பிரசுரிக்கப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் (ச.நா.நி.) பணியாளர் அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் பொருளாதாரமானது 2023 இல் வருடத்திலிருந்து வருடம் --3.0% வீழ்ச்சியினை பதிவுசெய்யும் எனவும் 2024 இன் இறுதியில் +1.5% வளர்ச்சியினை பதிவுசெய்யும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2023 இன் 2ஆம் அரையாண்டில் வேளாண்மைத் துறையிலான வளர்ச்சி மற்றும் மேம்பட்ட சுற்றுலாத்துறை உழைப்புகளினால் துணையளிக்கப்பட்டு மற்றும் குறைவான அடிப்படை விளைவிலிருந்து பொருளாதாரமானது 2023 இன் 2ஆம் அரையாண்டில் மீட்சியடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும், கொள்கை வட்டி வீதங்களை தளர்த்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் (இ.ம.வ.) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வீழ்ச்சியடையும் கொள்கை வட்டி வீதங்களுக்கு ஏற்ப சந்தை கடன் வழங்கல் வட்டி வீதங்களிலான வீழ்ச்சி என்பன மத்திய காலத்தில் தனியார் கடனினால் நடத்திச் செல்லப்படும் நுகர்வு மற்றும் முதலீடுகளுக்கான கேள்வியினை படிப்படியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வணிகச்சரக்கு ஏற்றுமதி துறைக்கான நெருங்கிய காலக் கண்ணோட்டமானது சவாலாகக் காணப்படுகின்ற போதிலும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தொழிலாளர்களிடமிருந்தான திடமான மற்றும் வளர்ச்சியடையும் பணமனுப்பல்கள் வெளிவாரித் துறைக்கு துணையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், ச.நா.நி. இடமிருந்து (அதன் சபையினால் இத்திட்டத்தின் முதலாம் மீளாய்வின் வெற்றிகரமான நிறைவினைத் தொடர்ந்து) பெறப்பட்ட நிதியளிப்பின் இரண்டாம் பகுதி மற்றும் ஏனைய பலதரப்பு கடன் வழங்கல் பங்காளிகள், 2023 இன் இறுதியில் நாணயத்திலான ஏதேனும் கீழிறக்கல் அழுத்தங்களை தணிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இ.ம.வ. 1 ஜுன் 2023 முதல் கொள்கை வட்டி வீதங்களை குறைப்பதன் மூலம் அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை தளர்த்துவதற்கு ஆரம்பித்தது. நிலையியல் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் நிலையியல் கடன் வழங்கல் வசதி வீதம் (SLFR) என்பன முறையே 13.00%[2] மற்றும் 14.00%[2] ஆகக் காணப்பட்டன. அதன் பின்னர், இ.ம.வ. ஜுலை மற்றும் ஒக்டோபர் மாதங்களில் இடம்பெற்ற நாணயக் கொள்கை கூட்டங்களில் வட்டி வீதங்கள் 300 அடிப்படை புள்ளிகளினால் மேலும் குறைக்கப்பட்டன. நாணயச் சபையானது பணவீக்கம் ஒரு குறைவடையும் பாதையில் அதன் இலக்கு நோக்கி செல்கின்றது எனவும் அதிகரித்த தனியார் கடன் பாய்ச்சல்களினூடாக பொருளாதாரத்தில் ஒரு மீளெழுச்சியினை தூண்டுவதற்கு நாணயக் கொள்கையினைத் தளர்த்தும் தேவை காணப்படுகின்றது எனும் கருத்தைக் கொண்டுள்ளது.

3 மாதங்கள், 6 மாதங்கள் மற்றும் 12 மாதங்கள் திறைசேரி உண்டியல்களுக்கான விளைவுகள் செப்டம்பர் 2023 இல் முறையே 17.42%[3], 15.13%[3] மற்றும் 13.30%[3] ஆகக் காணப்பட்டன. அரசாங்கப் பிணையங்களின் விளைவிலான வீழ்ச்சிக்கேற்ப, சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி செம்மையாக்கப்பட்டு நாணய நிலைமைகளிலான ஓர் மேம்பாடு மற்றும் வங்கியல் துறை திரவத்தன்மைகளுக்கு மத்தியில் AWPLR செப்டம்பரில் 14.67%[4] ஆக காணப்பட்டது.

[1] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், தேசிய கணக்குகள் 2023Q2
[2] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20230601_Monetary_Policy_Review_No_4_2023_e1.pdf
[3] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/press/pr/press_20230926_treasury_bill_auction_held_on_26_september_2023_e.pdf
[4] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/statistics/wei/WEI_20230927_e.pdf

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் (CCPI) அளவிடப்படும் புள்ளியிலிருந்து புள்ளிப் பணவீக்கமானது செப்டம்பர் 2023 இல் 1.3%[5] ஆக நிறைவடைந்தது. உணவுப் பணவீக்கமானது வருடத்திலிருந்து வருடம் -5.2%[6] வீழ்ச்சியடைந்தவேளை வீடமைப்பு, தண்ணீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனையவை மற்றும் ஆடை மற்றும் பாதணி போன்ற துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புகளின் காரணமாக உணவல்லாத பணவீக்கமானது 4.7%[6] ஆக அதிகரித்தது. அதேசமயம், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டியினால் (NCPI) அளவிடப்படும் பணவீக்கமானது செப்டம்பர் 2023 இல் புள்ளியிலிருந்த புள்ளி அடிப்படையில் 0.8%[7] ஆக நிறைவடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியினால் அளவிடப்படும் தலைப்பு பணவீக்கமானது இலங்கை மத்திய வங்கியின் இலக்கு வரம்பிலும் குறைவாகக் காணப்பட்டபோதிலும், உலகளாவிய எரிசக்தி விலைகள் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் வியாபித்திருக்கும் நிச்சயமற்றதன்மைகளினால் தலைப்பு பணவீக்கமானது அதன் இலக்கு வரம்பினை நெருங்கிய காலத்தில் விஞ்சலாம் என்ற சாத்தியத்தினை நாணயச் சபையானது ஏற்றுக்கொண்டுள்ளது.

அதேசமயம், செப்டம்பர் 2023 இறுதியில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் அமெரிக்க டொலர்கள் 3.5 பில்லியன்[8] என மதிப்பிடப்பட்டதுடன், இது அமெரிக்க டொலர்கள் 1.4 பில்லியன் நிகரான பீபள்ஸ் பேங்க் ஒவ் சைனாவிடமிருந்தான பரிமாற்று வசதிகளையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வசதியானது பயன்பாட்டிலான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். ச.நா.நி. மற்றும் ஏனைய பலதரப்பு கடன் வழங்கல் பங்காளிகளிடமிருந்தான புதிய நிதியளிப்புகளினால் துணையளிக்கப்பட்டு உடனடி நெருங்கிய காலத்தில் இலங்கை ரூபாயானது ஸ்திரமாக காணப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம். எவ்வாறாயினும், நாணயக் கொள்கை தளர்த்தல், இறக்குமதி கட்டுப்பாடுகளிலான தளர்வுகள் மற்றும் வெளிநாட்டு கடன் சேவையாற்றலின் மீள்தொடக்கம் என்பன மத்திய காலத்தில் இலங்கை ரூபாயில் அழுத்தத்தினை நெருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. செப்டம்பர் 2023 இன் இறுதியில் இலங்கை ரூபாயானது வருடத்திலிருந்து வருட அடிப்படையில் +10.6% ஆல் பெறுமதி உயர்வடைந்து ஒரு அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபா 324.5 ஆக காணப்பட்டது.

[5] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், CCPI இன் அசைவுகள், பக்கம் 01
[6] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், உணவு மற்றும் உணவல்லாத பணவீக்கம், பக்கம் 01
[7] மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களம், NCPI இன் அசைவுகள், பக்கம் 01
[8] இலங்கை மத்திய வங்கி, வாராந்த பொருளாதார குறிகாட்டிகள் - 27 ஒக்டோபர், பக்கம் 15

## நிதியத்தின் செயற்திறன்

30 செப்டம்பர் 2023 இல் நிதியத்தின் அலகொன்றின் தேறிய சொத்தின் பெறுமதி ரூ. 15.9046 ஆகக் காணப்பட்டது. உங்களது நிதியத்தின் முதலீடுகள் திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புகள், குறுங்கால கூட்டாண்மை கடன் பிணையங்கள், மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் மற்றும் கூட்டாண்மை சேமிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இவற்றுள் 27% ஆனவை 6 முதல் 12 மாதங்களில் முதிர்வடைகின்றன (பணச்சந்தை நிதியங்களுக்கு அனுமதிக்கப்பட்ட ஆகக்கூடிய முதலீட்டுக் காலமாகும்). செப்டம்பர் மாத இறுதியில், நிதியத்தின் சராசரி முதிர்வு 3.9 மாதங்களாகும் என்பதுடன் இது நிதியத்திற்கு விரைவில் மாற்றமடையா விளைவினை விளைவித்தது. இது உள்ளூர் கடன் மீள்கட்டமைப்பு சுற்றளவுகளது அறிவித்தலைத் தொடர்ந்து சந்தை வைப்பு வீதங்கள் மற்றும் அரசாங்கப் பிணையங்களது விளைவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் ஆகும். கடன் தரத்தைப் பொறுத்தளவில், நிதியத்தின் முதலீடுகளில் 94.8% ஆனவை A- மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டவை என்பதுடன் இது திடமான கடன் தகுதியினை உறுதிசெய்கின்றது.

**INTERIM FINANCIAL STATEMENTS**
**30th SEPTEMBER 2021**